# சைவ சித்தாந்தத்திற் சீவன் முத்திக் கொள்கை

ஏ. என். கிருஷ்ணவேணி

## அறிமுகம்

சைவ சித்தாந்தம் என்பது சைவசமயக் கொள்கைகளை விளக்கும் ஒரு தத்துவப் பிரிவாகும். சைவம் சிவத்தோடு தொடர்புடையது. அது சிவனைப் பரம்பொருளாகக் கொண்டது. சிவன் மேலான பரம்பொருள், தலைவன் என்ற வகையில் சைவ சித்தாந்தம் 'பதி' என்ற பெயரைக் கொடுத்துள்ளது. ஆன்மாக்கள் அநாதியாகவே மலங்களினாற் பந்திக்கப்பட்டதன் காரணமாக அவை 'பசு' என்ற பெயரைப் பெறுகின்றன. ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்று மலங்களும் ஆன்மாக்களைப் பந்தித்து நிற்பதன் காரணமாக அவை 'பாசம்' என்ற பெயரினால் அழைக்கப்படுகின்றன. பதி, பசு, பாசம் என்ற முப்பொருட்களின் உண்மையை விளக்கும் சைவ சித்தாந்தம், பாசங்களினாற் பந்திக்கப்பட்ட ஆன்மாக்கள் அந்தப் பந்தம், தளை, கட்டிலில் விடுபட்டுப் பதியாகிய தலைவனை அடைதலே உயர்ந்த நோக்கம் என்று கூறுகிறது. இவ்வாறு ஆன்மாக்களின் உண்மை, இயல்பு, இலட்சியம் பற்றிக் கூறி அதனை அடைவதற்குரிய வழிகள், அல்லது மார்க்கங்களையும் கூறியுள்ளன. அவை சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பன. இவற்றை சைவ நாற்பாதங்கள் என்று சைவ சித்தாந்த நூல்கள் கூறுகின்றன. சைவ நாற்பாதங்களை முறையாகப் பின்பற்றுவதன் மூலம் இருவினை ஒப்பு, மலபரிபாகம், சக்தி நிபாதம் என்ற நிலைகளைக் கடந்து பசுக்கள் பதியாகிய இறைவனுடன் இரண்டறக் கலந்துவிட முடியும். இவ்வாறு ஆன்மா இறைவனுடன் இரண்டறக் கலத்தலாகிய சாயுச்சிய முத்தியைப் பெறுவதே ஆன்மாக்களின் உறுதியானதும், இறுதியானதும் ஆகிய உயர் குறிக்கோள். இந்த சுத்தாத் துவைத முத்தியைச் சிறப்பித்துப் பேசும் சைவ சித்தாந்த நூல்கள் இந்த உடலோடு கூடிய நிலையிலேயே உலகத்தில் வாழ்கின்ற போதே உயர்ந்த நோக்கத்தை அடைந்துவிட முடியும் எனக் கூறி அதனை 'சீவன் முத்தி' என்று அழைக்கின்றன. சைவ மரபிற் சீவன் முத்தி அடைந்தவர்களாக நாயன்மார்களைக் கொள்வது மரபு. இந்த சீவன் முத்தர்களின் வரலாற்றைக் கூறும் நூல் 12ஆம் நூற்றாண்டில் சேக்கிழாரினால் இயற்றப்பட்ட பெரிய புராணம் ஆகும். இது திருமுறைகள் பன்னிரண்டினுள்ளே இறுதியாக வைத்தெண்ணப்படுவது. திருமுறைகள் யாவுமே வேதசாரமாக விளங்குபவை. சைவ சிந்தாந்த தத்துவக் கருத்துக்களை விளக்கும் சைவ சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கு ஆகும். இவை வேதங்களைப் பொதுநூலாகவும் ஆகமங் களைச் சிறப்பு நூலாகவும் கொண்டு எழுதப் பட்டவை. வேதாகமங்களுடன் சைவத் திரு முறைகளும், சைவசித்தாந்த சாத்திரங்களின் தோற்றத்திற்கு அடிப்படையாக அமைந் தமையைப் பின்வரும் பாடல் எடுத்துக் காட்டுகிறது.

"வேதம் பசு அதன்பால் மெய்யாகமம் நால்வர்
ஓது தமிழ் அதனுள்ளுறு நெய் – போதமிகு
நெய்யின் உறுசுவையாம் நீள்வெண்ணெய்
– மெய்கண்டான்
செய்ய தமிழ் நூலின் நிறம்."

பசுக்களாகிய வேதங்களில் இருந்து பெறப்படும் பாலாக ஆகமங்களும், பாலில் இருந்து பெறப்படும் நெய்யாக நால்வர் பாடிய தமிழ் வேதமும், அந்த நெய்யின் சுவையாக மெய்கண்ட தேவரினால் இயற்றப்பட்ட சிவஞானபோதமும் அமைகின்றது என்பதை இப்பாடல் உணர்த்தியுள்ளது. சிவஞானபோதம் சைவ சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கினுள் முதனூலாக விளங்குவது. வேதாகமங்களையும் திருமுறைகளையும் ஆதாரமாகக் கொண்டு தோற்றம் பெற்ற சைவசித்தாந்த சாத்திரங்கள் அனைத்தும் தம்முள் மாறுபடாது உயர்ந்த கருத்துக்களை முரண்படாது எடுத்துக் கூறுவன. திருமுறைகள் இறைவனைப் பாடும் புகழ்ச்சி நூல்கள். இவற்றைத் தோத்திரங்கள் என அழைப்பர். தோத்திரங்கள் எதனைப் புகழ்ந்து கூறுகின்றனவோ அதன் உண்மைத் தன்மை, இயல்பு, அதன் இலக்கணம் ஆகியவற்றைத்

தெளிவாகவும், சுருங்கிய நடையிலும் எடுத்துக் கூறும் நூல்கள் சாத்திரங்கள். திருமுறைகளுள்ளும் 12ஆம் திருமுறை இறைவனடியார்களாகிய சீவன் முத்தர்களின் வரலாற்றைக் கூற, சிவஞானபோதம் 12ஆம் சூத்திரமும் அந்த சீவன் முத்தர்களுக்குரிய இலக்கணங்களை விபரிப்பது குறிப்பிடத்தக்கது. இந்த அடிப்படையில் சீவன் முத்தி பற்றிய சைவசித்தாந்தக் கருத்துக்களை ஆராய்வது சிறந்தது.

**முத்திக் கொள்கை**

வடமொழியில் 'மோட்சம்' எனும் சொல் விடுதலை, விடுபடுதல் என்று பொருள்படும். இது பிறவியில் இருந்தும் விடுபடுதலைக் குறிக்கும். இதனையே முத்தி, வீடுபேறு என்று அழைக்கின்றோம். ஆன்மாக்கள் மலங்களினாற் பந்திக்கப்பட்டதன் காரணமாக அறியாமைக் குட்பட்டுக் கருமங்களைச் செய்து மீண்டும் மீண்டும் பிறவிக்குட்படுகின்றன. இப்பிறவித் துன்பத்திலிருந்து விடுபடுதலே அவற்றின் உயர் இலட்சியம் ஆகும். இதனை அடைவதாயின் ஆன்மாக்கள் தாம் செய்யும் வினையினின்றும் விடுபடல் வேண்டும். வினையினின்றும் விடுபடுவதாயின் அவை அறியாமையில் இருந்து விடுபடவேண்டும். ஆன்மாக்களின் அறிவை மறைத்து அறியாமையைக் கொடுப்பது ஆணவமலம். இது ஆன்மாவுடன் அநாதியே தொடர்புடையதனால் இது 'மூலமலம்' என்று அழைக்கப்படும். ஆணவமலம் பரிபாகம் அடையும்போதுதான் ஆன்மா இறைவனது அருளைப் பெறமுடியும். இதற்குரிய வழியாக சைவசித்தாந்தம் சரியை, கிரியை, யோகம், ஞானம் போன்ற நால்வகை மார்க்கங்களைக் கூறுகின்றது. இவற்றை முறையாகப் பின்பற்றும்போது அவை இருவினை ஒப்பு நிலையை அடைகின்றன. அதாவது நல்வினை தீவினை இரண்டையும் சமமாக நோக்கும் நிலையை அடைதல் ஆகும். இதனை உமாபதி சிவாச்சாரியார்

> ''நீடும் இருவினைகள் நேராக நேராதல்
> கூடும் இறைசக்தி கொளல்''

எனத் திருவருட் பயனிற் கூறுகின்றமை குறிப்பிடத்தக்கது. இருவினைகளையும் சமமாக நோக்கும் நிலையில் இறைவனது திருவருட் சக்தி ஆன்மா மீது பதிகிறது. அத்திருவருளே குருவடிவாக வந்து ஆன்மாக்களுக்கு உண்மையை உபதேசிக்க ஆன்மா மலபந்தத்தில் இருந்து விடுபட்டு இறைவனை அடைய முடியும். இதனைத் திருமந்திரம் பின்வரும் பாடலில் விளக்குகிறது.

> ''இருவினை நேரொப்பில் இன்னருட் சக்தி
> குருவென வந்து குணம் பல நீக்கித்
> தருமென ஞானத்தால் தன்செயலாற்றல்
> திரிமலந் தீர்ந்து சிவனவனாமே''

மாணிக்கவாசகர் கூறுவதுபோல ''மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே" மோட்சத்தைப் பெறுதல் வேண்டும். அத்தகைய மோட்சமே சைவ சித்தாந்தம் கூறும் சாயுச்சிய மோட்சம். இதனை 'சுத்தாத்துவித' முத்தி என சைவ சித்தாந்த சாத்திர நூல்கள் கூறுகின்றன.

'துவைதம்' என்றால் இரண்டு என பொருள்படும். அத்துவைதம் என்றால் இரண்டல்ல. இரண்டில்லை என்று பொருள்படும். சைவசித்தாந்தம் அத்துவைதத்திலுள்ள 'அ' என்ற சொல்லுக்கு 'அல்ல' என்ற பொருளைக் கொடுத்து மோட்ச நிலையில் ஆன்மாவும் இறைவனும் இரண்டல்ல எனக் கூறத்தக்க வகையில் இரண்டறக் கலப்பதாகக் கூறுகிறது. இரண்டல்ல என்றால் அது ஒன்றும் அல்ல, இரண்டும் அல்ல. அது ஒரு வகையில் ஒன்றாகவும் இன்னொரு வகையில் இரண்டாகவும் இருக்கலாம். என்று பொருள்படும். இதனை விளக்கும் திருவருட் பயன் பாடல்

> ''தாடலைப் போற் கூடியவை தானிகழா வேற்றின்பக்
> கூடலை நீ ஏகம் எனக் கொள்''

என அமைகிறது. தாள், தலை என்ற இரண்டு சொற்களும் புணர்ந்து தாடலை (தாள் + தலை = தாடலை) என்ற சொல் வருகிறது. இது ஒரு வகையில் ஒரு சொல்லாகவும் இன்னொரு

வகையில் இரண்டு சொற்களின் புணர்ச்சி யாகவும் உள்ளது. இதனை மேலும் விளக்குமிடத்து

''ஒன்றாலும் ஒன்றாது இரண்டாலும் ஓசை
—எழாதென்றால்
ஒன்றன்று இரண்டும் இல்''

என்ற பாடலை உமாபதி சிவாச்சாரியார் தருகிறார்..

இவ்வாறு ஆன்மாக்கள் மீண்டும் பிறவிக்குட் படாத வகையில் இறைவனோடு இணைகின்ற அத்துவைத முத்தியே 'பரமுத்தி' என்று சிறப்பித்துக் கூறப்படும்.

**சீவன் முத்தி**

பரமுத்தியைக் குறிக்கோளாகக் கொண்டிருந் தாலும், ஆன்மாக்கள் உடலோடு கூடிய நிலையிலேயே இவ்வுலகில் வாழும் காலத்தி லேயே முத்தியைப் பெறமுடியும் என்ற உயர்ந்த கருத்தைச் சைவ சித்தாந்தம் முன் வைக்கிறது. இதுவே 'சீவன் முத்தி' என்று அழைக்கப்படும். சைவமரபில் சீவன் முத்தர்களாகக் கருதப்படு பவர்கள் சிறப்பாக நாயன்மார்கள் ஆவர். இவர்கள் முழுமையாக மலபந்தத்தில் இருந்து விடுபடும்போது தேகம் நீங்கி விதேக முத்தியை அடைவர் என்பது கொள்கை. சீவன் முத்தர் களின் இயல்பு இலக்கணம் பற்றித் திருவருட் பயன் பத்தாம் அதிகாரம் 'அணைந்தோர் தன்மை' என்ற தலைப்பிற் பத்துப் பாடல்கள் மூலம் விளக்கியுள்ளது. அணைந்தோர் என்பது இறைவனை அணைந்தோர் என்று பொருள் படும். இவர்கள் அறிவு கைவரப்பெற்று இருவினைகளையும் சமமாக நோக்கும் இயல்பினர். இதனைப் பெரிய புராணம்

''கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்
ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்குவார்''

என்ற பாடல் அடிகள் மூலம் விளக்குகிறது.

திருவருட்பயன் சீவன் முத்தர்கள் இறைவனாற் செய்யப்படும் ஐந்தொழில்களையோ, மாயா காரியங்களினாற் தரப்படும் போகங்களை நுகரும் இருவினைகளையோ சாராத மேலான இயல்பினை உடையவர்கள் எனக் கூறுகிறது.

''ஐந்தொழிலுங் காரணங்களாந் தொழிலும் போக
— நுகர்
வெந்தொழிலு மேலார் மிக''

மேலும் சீவன் முத்தர்கள் ஆமையைப் போன்ற தமது பொறி புலன்களை புறத்தே செல்லாத வாறு சிவபோக உணர்விற் திளைத்து மகிழ்வர் என்பதைத் திருவருட்பயன்

''புலனடங்கித் தம்முதற்கட் புக்குறுவர் போதார்
தலநடக்கும் ஆமை தலை.''

என்று விளக்குகிறது. சாதாரணமாக உலகில் வாழும் சீவர்கள் தாம் செய்யும் நல்வினை தீவினைகளுக்கேற்ற பயனைப் பெறும் தகமை உடையரோவார், ஆனால் சீவன் முத்தர்கள் தாம் செய்யும் செயல்களினாற் பந்திக்கப்படுவ தில்லை. அவர்கள் பெறுவது சிவப்பேறாகும் என்பதைத் திருவருட்பயன்

''உறுந்தொழிற்குத் தக்க பயன் உலகம் தத்தம்
வறுந்தொழிற்கு வாய்மை பயன்''

என்ற பாடல் மூலம் விளக்குகிறது.

சிவன்முத்தர் வரலாறு கூறும் 12ஆம் திருமுறை யாகிய பெரிய புராணத்துக்கு இலக்கணமாக அமையும் சிவஞானபோதம் 12ஆம் சூத்திரம் மிக அழகாக சீவன் முத்தர் இலக்கணத்தைக் கூறுகிறது.

செம்மலர் நோன்தாழ் சேரலொட்டா
அம்மலங்கழிஇ அன்பரொடு மருஇ
மாலறநேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந்தானும் அரன் எனத் தொழுமே

சிவன்முத்தர்கள் சிவனடியார்களையும், சிவன்கோயில்களையும் சிவனாகக் கண்டு வணங்கும் இயல்பினை உடையவர்கள். ''பற்றுக பற்றற்றான் பற்றினை'' என்பதற் கிணங்க இறைவனிடம் மட்டுமே பத்தி செலுத்துவதன் மூலம் உலகப் பற்றுகளில் இருந்து விடுபட்டு இறைவனையும்,

இறைவனடியார்களையும் மட்டும் வழிபடும் இயல்பினர். சிவஞான சித்தியாரும் 'திரிமலங்கள் அறுத்தீசன் நேசரோடுஞ் செறிந்திட்டு அங்கவர் தந்திருவேடம் ஆலயங்கள் எல்லாம் அரன் எனவே தொழுதிறைஞ்சி ஆடிப்பாடி'' என்று சீவன்முத்தர் இயல்பு பற்றிக் கூறுகின்றது.

**பக்தி நெறியும் சீவன்முத்தர்களும்**

தமிழர் மரபிலும், சைவசித்தாந்தத்திலும் சிறப்பித்துப் பேசப்படுவது பக்திநெறி. சைவ நாயன்மார்களுட் காரைக்காலம்மையாரினாலும், ஆழ்வார்களுட் பேயாழ்வார், பொய்கை யாழ்வார், பூதத்தாழ்வார் ஆகியோரினாலும் தோற்றுவிக்கப்பட்ட பக்தி இயக்கம் கி.பி. 6ஆம் 7ஆம் நூற்றாண்டுகளிற் தோன்றிய ஏனைய நாயன்மார்கள், ஆழ்வார்களினாலும், நடாத்தப்பட்டது. இதன் பயனாகத் தோன்றியவையே பக்தி இலக்கியங்கள். இறைவனிடம் பத்தி செலுத்தி அதன்மூலம் உறவு கொண்டு அத்தகைய பேரின்ப அனுபவங்களைப் பக்திப் பாடல்களாகத் தந்த அருளாளர்கள், இறையன்புக்கு முன்னால் உலகியல் இன்பங்களை உயர்வாகக் கருதவில்லை.

''யாவையும் சூனியம் சத்தெதிர் ஆகலின்'' என்ற சிவஞானபோதக் கருத்தை வாழ்க்கையின் மூலம் வெளிப்படுத்தியவர்கள் சீவன் முத்தர்கள். இவர்கள் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நால்வகை மார்க்கங்களை முறையாகப் பின்பற்றி உய்வு பெற்றவர்கள். திருமூலர் இக்கருத்தினை பின்வரும் பாடலில் விளக்குகின்றார்.

''பக்தன் கிரியை சரியை பயில்வுற்று
சுத்த அருளால் துரிசற்ற யோகத்தில்
உய்த்த நெறியுற் றுணர்கின்ற ஞானத்தால்
சித்தங் குருவருளாற் சிவமாகுமே''

– (திருமந்திரம் 1455)

பக்தனாகிய சீவன் சரியை, கிரியைகளைப் பழகி இறைவன் செய்யும் தூய திருவருளால் குற்றமற்ற யோகத்தில் உற்ற ஆதாரங்களை முறையே அடைந்து, அடையப்பெறும் ஞானத்தாற் குருவின் திருவருளால் சித்தம் சிவமாகி விளங்குபவன் என்பது திருமந்திரம் தரும் விளக்கம்.

''சித்தமலம் அறிவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அத்தன் எனக்கு அருளியவாறு''

என்று மாணிக்கவாசகர் பாடுவது இங்கு கவனிக்கத்தக்கது. சைவசித்தாந்தக் கொள்கைப்படி மும்மலங்களினாற் பந்திக்கப்பட்ட ஆன்மாக்களுக்கு இறைவன் குருவை அதிட்டித்து நின்று அருள் செய்வான். குருவின் உருவில் உள்நின்று அருள்செய்பவன் சிவனே ஆதலில் திருமந்திரம்

''குருவே சிவனுமாய்க் கோனுமாய் நிற்கும்''

எனக் கூறுகிறது. சிவஞானபோதமும்

''ஐம்புலவேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதற் குருவுமாய்த் தவத்தினிலுணர்த்திவிட்டு
அந்நியம் இன்மையின் அரன் கழல் செலுமே''

என்ற 8ஆம் சூத்திரத்தின் மூலம் ஆன்மாக்கள் முன்செய்த தவத்தின் பயனாக, இறைவன் குருவடிவாக வந்து தமக்கும் ஆன்மாக்களுக்கு மிடையே அந்நியம் இன்மையை உணர்த்த அவை வேறுபாட்டினை மறந்து இறைவனது பாதங்களை அடையும் என்று கூறுகிறது. இறைவன் மாணிக்கவாசரைக் குருவடிவாக வந்து ஆட்கொண்ட செய்தி 8ஆம் திரு முறையில் கூறப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது. தோத்திரங்களாகிய திருமுறைகள் பக்தியை முதுர்வித்து அருளைப் பெறுவிப்பனவாகவும், சாத்திரங்களாவன அவ்வருளை நிறைவித்து இறைவன்பால் இறவாத இன்ப உணர்வை அடைவிப்பனவாகவும் உள்ளன. சீவன் முத்தர்கள் இறைவன் அன்பு ஒன்றிற்காகவே வாழ்ந்தவர்கள். அந்த அன்பிற் திளைப்பதற்காக முத்தியைக் கூட வேண்டாத இயல்பினர் என்பதனை

''கூடும் அன்பினிற் கும்பிட லேயன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்.''

என்பெரிய புராணம் கூறுகின்றது.

நாயன்மார்களை சீவன்முத்தர்களாகக் கொள்வது சைவமரபு. இவர்களது சமயத் தொண்டினை நோக்கும்போது, அக்கால சமயச் சூழலில் பிறச்சமயங்களாகக் கருதப்பட்ட சமணமும் பௌத்தமும் தமிழ்நாட்டிற் செல்வாக்குச் செலுத்திய நிலையில் சைவத்தை வளர்க்க வேண்டிய தேவை நாயன்மார்களுக்கிருந்தது. இதே போன்று வைஷ்ணவ ஆழ்வார்களுக்கு வைஷ்ணவத்தை வளர்க்க வேண்டிய தேவை ஏற்பட்டது. பௌத்தத்தை விட சமணமே அக்காலத்தில் அதிகம் செல்வாக்குப் பெற்றிருந்தது. சமணத்தைக் கண்டிக்கும் கருத்துக்களே நாயன்மார்கள், ஆழ்வார்கள் பாடல்களில் அதிகம் காணப் படுகிறது. சமண மதமும் கர்மம், மறுபிறப்புக் கொள்கைக்கு முக்கியத்துவம் கொடுத்தது. அதனுடன் வினைப்பயன்களை முழுமையாக நுகர்வதன் மூலம் ஒருவன் வீடு பேற்றினை அடைய முடியும் என்ற கருத்தையும் சமணர்கள் முன்வைத்தனர். ஆனால் நாயன்மார்கள் வினை, வினைப்பயன் இவற்றுக்கு மேலாக இறைவன், இறையருள், இறையன்புக்கு இடம் கொடுத்து இறையன்பின் மூலம் உய்வு நெறியை அடையலாம் எனக்கூறி சைவத்தின் பெருமையைத் தெளிவுபடுத்தி அதன் வளர்ச்சிக்கு உறுதுணையாக நின்றனர்.

''காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி'' மெய்நெறி காண முயற்சித்த நாயன்மார்கள் செயற்றிறம் இறைவனைச் சார்ந்தது. ஒருசில காலங்கள் சமணநெறி நின்ற திருநாவுக்கரசர் சமணரது உயர் தத்துவமான கொல்லாமை எனும் அகிம்சையை உணர்ந்திருந்தவர். அத்தகைய கொல்லாமைக்கு மாறான கொலைத் தொழில் புரியும் புலையர்கள் கூட உய்வுபெறச் சைவத்தில் இடமுண்டு என்பதையும், அக் கொலைஞர்கள் சிவனடியார்களாக இருப்பின் அவர்கள் கூட வழிபாட்டுக்குரியவர்கள் என் பதனையும் எடுத்துக் காட்டியமை நோக்குதற்குரியது.

''சங்கநிதி பதுமநிதி இரண்டும் தந்து
தரணியொடு வானாளத் தருவரேனும்
மங்குவார் அவர் செல்வம் மதிப்போம் அல்லோம்
மாதேவர்க் கேகாந்த அல்லார் ஆகில்
அங்கமெல்லாங் குறைந்தழுகு தொழுநோயராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்பராகில்
அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே.''

ஞானசம்பந்தரும் சமணர்களது கருத்துக் களுக்கு மறுதலையாக சைவத்தின் பக்திச் சிறப்பை உலகோர்க்கு எடுத்தியம்பியவர். அவரும்,

''வினை தீர்தல் எளிதாமே தீவினை வந்தெம்மை
தீண்டப்பெறா''

எனப் பாடுகின்றமை குறிப்பிடத்தக்கது.

சேக்கிழார், காரைக்காலம்மையார் புராணத்தில்

''நான் புகழ்ந்து பாடி அறவா நீ ஆடும் போதுன்னடியின்
கீழ் இருக்க''

என்றார் என அம்மையாரின் விருப்பினை வெளிப்படுத்துவதும் நோக்குதற்குரியது. திருநாவுக்கரசர்

''இனித்தமுடைய எடுத்த பொற்பாதமும் காணப்
பெற்றால் மனிதப்பிறவியும் வேண்டுவதே இந்த
மாநிலத்தே''

என்று பாடும்போது இறைவனது அன்பிற்காக மீண்டும் மீண்டும் பிறவி எடுக்கவும் தயாராக இருந்தமை புலனாகும். எனவே சீவன்முத்தர் என்போர் இந்நிலவுலகத்திலேயே இவ்வுடலுட னேயே இறையன்பினால் உய்வு அடைந்த வராவர். உலகியற் செயல்கள் எவையும் அவர்களைப் பாதிப்பதில்லை. வினைகளுக்கப் பாற்பட்டு நின்று இறைதொண்டிலும் சமூக சேவையிலும் ஈடுபட்ட அருளாளர்கள் ஆவார். வாழ்க்கை வாழ்வதற்கே என்ற உண்மையை உணர்த்தியதுடன், இறையன்பிற் திளைத்து

ஆனந்த அனுபவத்தைப் பெற்று வாழ்ந்த வர்களாவர். திருமூலர் கூறுவது போன்று

''அகத்திற் கண் கொண்டு காண்பதே ஆனந்தம்''

என்பது பக்தர்களின் இயல்பு. இவ்வியல்பினால் புற உலகையும், சூழலையும் மறந்து காலதேசத்திற்கு அப்பாற்பட்டு தொண்டு புரிந்தவர்கள் திருத்தொண்டர்கள் ஆவர். இவர்கள் தேகம் நீங்கப்பெற்ற நிலையில் இறைவனுடன் இரண்டறக் கலத்தலாகிய பரசாயுச்சிய முத்தியைப் பெறுவர் என்பது சித்தாந்தக் கொள்கையாகும். இவ்வாறு பக்தி நெறி நின்று இறைவழிபாட்டில் ஈடுபட்ட நாயன்மார்கள் சீவன் முத்தர்களாகவே வாழ்ந்த னர். இவர்கள் வாழ்க்கையில் இருந்து ஒதுங்கி யவர்களல்ல, இறையன்பிற் திளைத்தற்காகவே இவ்வுலகிற் பிறவியெடுப்பதையும் பெரும் பேறாகக் கொண்டவர்கள். இவர்கள் செயலற்ற வர்களல்லர், செயலிற் துறவு பூண்டவர்கள். இவர்கள் செய்யும் செயல்கள் எதுவும் இவர்களுக்கு தளையாகவோ பந்தமாகவோ இருக்கவில்லை. எனவே இறையன்பின் மூலம், வினைகளுக்கு அப்பாற்பட்டு நின்று சமூகத் தொண்டாற்றியவர்களாக இவர்களைக் கருதலாம். ''ஓது காதல் உறைப்பின நின்ற'' அடியவர்களை சேக்கிழார்,

''பூதம் ஐந்தும் நிலையில் கலங்கினும்
மாதோர் பாகர் மலர்த்தாள் மறப்பிலார்''

என்று புகழ்ந்து பாடுகிறார். காரைக் காலம்மையார்

''கண்டெந்தை என்றிறைஞ்சிக் கைப்பணி யான்
செய்யேனேல் அண்டம் பெறினும் அது வேண்டேன்''

என்று பாடுவது கவனிக்கத்தக்கது. இல்லறத்திலேயே துறவறங் கண்ட பெருமைக்குரிய இயல்பினரான அம்மையாரின் வாழ்க்கை இறையன்புக்கும், உள்ளத் துறுதிக்கும் சிறந்த எடுத்துக் காட்டு. திருத்தொண்டர்களின் கடமை பற்றிச் சேக்கிழார் பின்வரும் பாடல்களில் விளக்குகிறார்.

''மண்ணிற் பிறந்தார் பெறும் பயன் மதி சூடும்
அண்ணலாரடியார் தமை அமுது செய்வித்தல்
கண்ணினாலவர் நல்விழாப் பொலிவு கண்டார்தல்
உண்மையாமெனினுலகர் முன் வருகென வுரைப்பார்

– (திருஞானசம்பந்தர் புராணம் 2985)

இம்மண்ணுலகில் வினைக்கிடமாக வந்து பிறந்த உயிர்கள் பெறும் பயன் யாதெனிற் பிறைசூடும் பெருமானடியார்களைத் திருவமுது செய்வித் தலும், கண்ணினால் அவ்விறைவரது திருவிழாக் களின் பெரும் பொலிவினைக் கண்டு மகிழ்தலும் ஆகிய இரண்டுமே ஆகும் என்று பெரிய புராணம் கூறுகிறது. எனவே வினைக்கீடாகப் பிறவி எடுத்தவர்கள், கன்மவினையினின்றும் விடுபடுவதற்கு ஏற்ற வகையில் பிறவி எடுத்து சிவப்புண்ணியங்களால் முடிவிற் பிறவி ஒழித்து வீடு பேறு அடையும் நிலையை உடையவர்கள் என்பது தெளிவாகிறது. சிவஞான சித்தியாரும் (258)

''மண்ணிலே வந்த பிறவீயே, மானுடப் பிறவி தானும் வகுத்தது''

என்று கூறுவது குறிப்பிடத் தக்கது. இவ்வாறு பிறந்தவர்கள் பெறும் பயன் என்பது வீடு பேற்றினை அடைவதற்குரிய சாதனமாகிய செயல், பயன், பயனைப் பெறுவதற்குரிய செயல் எது என்பதை உணர்த்துவதாக உள்ளது.

சீவன்முத்தர்களாகிய திருத்தொண்டர்கள் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நால்வகை மார்க்கங்களிற் தமக்கு ஏற்புடைய மார்க்கங்களைப் பின்பற்றி வழிபாட்டு முறை களில் ஈடுபட்டு முத்திநிலையைப் பெறுவர் என்பது சைவ சித்தாந்தக் கொள்கை.

**கலாநிதி ஏ. என். கிருஸ்ணவேணி**
முதுநிலை விரிவரையாளர், நுண்கலைத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.

**5வது உலக சேக்கிழார் விழாவில் வாசிக்கப்பட்ட கட்டுரை**